Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No.45/2025 |
| Deposition of Witness of PW | : | Prosecution – PW 3 |
| | | Defence |
| | | Court |
| Name | : சின்னதம்பி | |
| Father / Husband Name | : சுப்பையா | |
| Village | : கீழபரளச்சி | |
| Taluk | : அருப்புக்கோட்டை | |
| Caste | : | |
| Calling | : விவசாயம் | |
| Religion | : | |
| Age | : 50 | |

( எதிரி ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 24.03.2026

**முதல் விசாரணை :-**

1. நான் கீழபரளச்சி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான்

விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரியை நான் பார்த்தது இல்லை. அவரை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

( **அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து சாட்சியிடம் விசாரிக்க அனுமதி கோரப்பட்டதன் மூலம் அனுமதிக்கப்பட்டது.**)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

2. நான் வேலையின் கலைப்பாக இருக்கும் நேரத்தில் கணேஷ் புகையிலை அல்லது பான்மசாலா பாக்கு பணன்படுத்துவேன் என்று சொன்னால் சரியல்ல. கடந்த பத்து நாட்களுக்கு முன்பு ப.மேலையூரில் மளிகை கடை வைத்துள்ள இராஜகோபாலபுரத்தைச் சேர்ந்த அர்ச்சுணன் மகன் விஜயக்குமார் என்பவரது மளிகை கடையில் கணேஷ் புகையிலை பாக்கெட் வாங்கி அதை பயன்படுத்தினேன் என்றும், அதில் எனக்கு தலை சுற்றல் மற்றும் வாந்தி ஏற்பட்டது என்றும், அதன் பின்னர் நான் ப.மேலையூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று மருத்துவர் எழுதிக்கொடுத்த மருந்து மாத்திரைகளை வாங்கி சாப்பிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. ப.மேலையூரில் மளிகை கடை வைத்துள்ள அர்ச்சுணன் மகன் விஜயக்குமார் என்பவர் மீது தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்த குற்றத்திற்காக பரளச்சி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்பட்டதாக கேள்விபட்டதாக போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –** இல்லை.

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

M VASANTHA KUMAR
Digitally signed by M VASANTHA KUMAR
Date: 2026.03.24 17:35:16 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.